செய்தி வெளியீடு எண்.11/2018 நாள்: 13.02.2018

சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், சோழிங்கநல்லூர் பகுதி 15க்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் பணிமனை 196 – ஈஞ்சம்பாக்கம், பணிமனை 193 (பகுதி) – ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பணிமனை 192 (பகுதி) நீலாங்கரை ஆகிய பகுதிகளில் பணி நிறைவடைந்து 21.11.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் சென்னை குடிநீர் வாரியம் தலைமை அலுவலகத்திலுள்ள பதிவு பிரிவு மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, குடிநீர் இணைப்புக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகளை புதிய குடிநீர்குழாய்களில் மாற்றுவதற்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி இணைப்பினை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே புதிய குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்கும் பொதுமக்கள் இது தொடர்பாக சென்னை குடிநீர் வாரிய அலுவலர்களை தொடர்பு கொள்ளவேண்டுமெனவும் வாரியத்திற்கு தொடர்பற்ற வெளியாட்கள் அல்லது இடைத்தரகர்களை அணுக வேண்டாம் என்றும் பொதுமக்களுக்கு சிறந்த சேவை வழங்க வாரியத்திற்கு ஒத்துழைக்குமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்புகொள்ள வேண்டிய கைபேசி எண்கள்

1. துணை பகுதி பொறியாளர் 8144930252, 8144930340
2. உதவி பொறியாளர் பணிமனை 192 8144930192
3. உதவி பொறியாளர் பணிமனை 193 8144930193
4. உதவி பொறியாளர் பணிமனை 196 8144930196

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்